

திருவண்ணாமலை ஒன்றியம், காட்டாம்பூண்டியில், மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.வேணுகோபால் அவர்களின் நினைவிடத்தை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டச் செயலாளர்கள் எம்.எஸ்.தரணிவேஉந்தன், க.தேவராஜ் மற்றும் டாக்டர் எ.வ.வே. கம்பன், சி.என்.அண்ணாதுரை, முன்னாள் அரசு செயலாளர் பிச்சாண்டி.ஐ.ஏ.எஸ்., கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், எஸ். பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், க.சௌந்தரராசன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், மாதவ.சின்ராஜ் உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. முன்னாள் அவைத் தலைவர்

# த.வேணுகோபால் நினைவிடம் திறப்பு - நினைவேந்தல்!

### நினைவிடத்தை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்

திருவண்ணாமலை, பிப்.16-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. முன்னாள் அவைத்தலைவரும், முன்னாள் நடாளுமன்ற உறுப்பினருமான த.வேணுகோபால் அவர்களின் நினைவிடம் திறப்பு மற்றும் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நேற்று (பிப்.15) நடைபெற்றது. நினைவிடத்தை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, தலைமை வகித்தார்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன். எம்.பி., திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜ், கழக மருத்துவ ரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி, அ.நல்லதம்பி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எஸ்.விஜயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜ யரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், சிவஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், பொதுக்குழு உறுப்பினர் சு.அரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப் பணி துறை அமைச்சருமான எ.வ.வேலு கலந்து கொண்டு நினைவிடத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் தலைமைச் செயலாளர் பிச்சாண்டி.ஐ.ஏ.எஸ்., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.இராஜசேகர், ஆர். சிவானந்தம், ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைசெயலாளர் வ.அன்பழகன், வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் என்.பாண்டுரங்கன், க.லோகநாதன், ஜெயராணி ரவி, மாவட்டப் பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி.

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ்.டி.கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி.அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், இ.பிச்சைகண்ணு, பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினிவினோத் திவாகரன், இராணிவெங்கடேசன்.

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணா மலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க. சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

நினைவிட திறப்பு ஏற்பாட்டினை மாவட்ட அவைத்தலைவர் கோ.கண்ணன், தி.அரிகோபால், இரா.ஜோதி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# திட்டக்குடி - நெய்வேலி சட்டமன்றத் தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!

கடலூர் பிப்.16-

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மற்றும் நெய்வேலி சட்டமன்ற தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (16.02.2025) ஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது.

திட்டக்குடி சட்டமன்ற தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று காலை 10 மணி அளவில் திட்டக்குடி சொர்ணம் ஆறுமுகம் மஹாலில் நடைபெறுகிறது.

நெய்வேலி சட்டமன்ற தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் மாலை 4 மணி அளவில் நெய்வேலி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அது சமயம் மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகரக் கழக, பேரூர் கழக, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக சார்பு அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் தொ.மு.ச நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் கடலூர் மாவட்டத்திற்கு வருகையை முன்னிட்டு. முதல்வர் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடுவது குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா. காளியப்பன்

### பிப்ரவரி 16 (2008)



தி.மு.க. தொடக்கக் கால உறுப்பினராகவும் தொடர்ந்து மாவட்ட பிரதிநிதியாகவும் – நான்குநேரி வட்டக் கழக அவைத் தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் – மூன்று முறை இராதாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – நெல்லை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஐந்துமாத சிறைவாசமும் – சட்ட எரிப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# பிரதமர் மோடியே! தமிழ்நாடும் இந்தியாவில்தானே உள்ளது!

பா.ஜ.க ஆளும் மாநிலங்கள் மற்றும் இந்தி பேசும் மக்கள் அதிகம் வாழும் மாநிலங்களுக்கு மட்டுமே அதிக நிதியும் அடுத்தடுத்து திட்டங்களும் வாரி வழங்குவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. இந்தி பேசாத அம்மொழியை எதிர்க்கும் தென்மாநிலங்கள், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களை புறக்கணிப்பதோடு நிதியும் ஒதுக்காமல், திட்டங்களும் தராமல் ஏதோ பகை நாட்டின் மாநிலங்களைப் போல் வெறுப்போடு தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருகிறார்.

அதுவும் தமிழ்நாடு என்றப் பெயரைக்கூட தமிழச்சி என்று கூறிக் கொள்ளும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தான் வாசித்த நிதி நிலை அறிக்கையில் இடம்பெறவிடாமல் தடுத்துள்ளார். சாதுர்யமான தமிழச்சி தான். இவர் தான் 8 முறை நிதிநிலை அறிக்கை வாசித்தவர் என்ற பெருமைக்குரியவராம். பீற்றிக் கொள்கிறார்.

ஐ.நா.விற்குப் போனால் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று தமிழில் உள்ள அழகிய சொற்றொடரைப் பெருமையாக பேசுகிறார். முன் தோன்றி மூத்த மொழி தமிழ் மொழி தான் என்றும் அந்த உலகின் மூத்த மொழி தமிழ் இந்தியாவில் இருப்பது நமக்குப் பெருமை என்கிறார். ஒரு பா.ஜ.க. எம்.பி. தருண்விஜய்ஐ ஏவி விட்டு திருவள்ளுவர் சிலையை தூக்கி வரச் செய்தார். ஆனால் அச்சிலை எங்கு தூக்கி வீசப்பட்டது என்பது மோடி அவர்களுக்குத்தான் தெரியும். தருண் விஜய் என்பவரை ஆளையே காணோம்.

புதிய கல்விக் கொள்கை என்று ஒன்றை உருவாக்கி அதை தமிழ்நாடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதும் அதில் இந்தியும் சமஸ்கிருதமும் திணிக்கப்படும் திட்டம் இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு அறிஞர் அண்ணா கொண்டு வந்த இரு மொழிக் கொள்கைக்கு எதிரானது என்றும் எங்கள் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு எந்தக் கல்வியைத் தர வேண்டும் என்பது எங்கள் உரிமை என்று கூறி ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்கவில்லை என்பதற்காக தமிழ்நாட்டு கல்விக்கு தரவேண்டிய நிதி ரூ.2152 கோடியை தராமல் குஜராத், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுத்து தனது வன்மத்தை காட்டியுள்ளார் பிரதமர் மோடி.

இந்தியா மதச்சார்பற்ற நாடாக அரசியலமைப்பு சட்டப்படி இருக்க வேண்டுமானால் பா.ஜ.க. அரசு மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது மதத்தால் மக்கள் பிளவுண்டு போகக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் இந்தியா கூட்டணியை உருவாக்கி ஒத்தக் கருத்துள்ள கட்சிகளை ஒன்றிணைத்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்து மைனாரிட்டி அரசாக பா.ஜ.க. அரசை தள்ளாட வைத்தவர் தான் எங்கள் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.



**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

இந்தியா கூட்டணியை உருவாக்கும் போது தீவிரமாக இருந்த நிதீஷ்குமார் என்ன மிரட்டலோ மூன்று மாதத்திலேயே பா.ஜ.க. கூட்டணிக்கு ஓடினார்? ஆனால் உறுதியாக நின்று எதிரியாக நினைப்பவரை வீழ்த்துவதையே திடமாகக் கொண்டவர் தளபதி அவர்கள் தான்.

அதனால் தான் தமிழ்நாட்டுக்கு 8 முறை பிரச்சாரத்திற்கு வந்தும் பா.ஜ.க.விற்கு ஒரு சீட்டைக் கூட பெறமுடியவில்லை. தனது கொள்கையில் தீர்க்கமாக நின்ற கழக தலைவரின் தி.மு.க. தலைமையிலான கூட்டணியை 40க்கு 40திலும் வெற்றி பெற வைத்தனர். ஆனால் பா.ஜ.க. வெற்றி பெறப்போவதாக அமித்ஷாவும் மற்ற தலைவர்களும் கூறியது 400 எம்.பி.க்கள் என்பதாகும். ஆனால் அவர்கள் வெற்றி பெற்றதோ வெறும் 240 எம்.பி.க்கள் தான். அதாவது மைனாரிட்டி அரசு.

பா.ஜ.க. 500 வாக்குகளில் வெற்றி பெற்ற தொகுதிகள் 50. 1000 வாக்குகளுக்குள் வென்ற தொகுதிகள் மட்டும் 100. ஆக தமிழ்நாட்டைப் போல் பணியாற்றியிருந்தால் மற்றும் நிதிஷ்குமார் போன்றவர்கள் ஓடாமல் இருந்திருந்தால் இந்த 150 சீட்டுகளில் 75 சீட்டுகளை இழந்திருப்பார்கள். இன்று மோடி பிரதமராகவே இருந்திருக்க முடியாது.

டெல்லி சட்டமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மியும் காங்கிரஸ் கட்சியும் கூட்டணியாக நின்றிருந்தால் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்திருக்கவே முடியாது. இருவரும் தற்போது உணர்ந்து என்னாவது?

இந்தியா சுதந்திரம் அடைந்த போது அமெரிக்க 1 டாலர் மதிப்பு இந்தியா ரூபாயில் 2 மட்டுமே இருந்தது. தி.மு.க. கூட்டணியில் இருந்த மன்மோகன் சிங் அரசின் காலத்தில் 2014ல் அமெரிக்க டாலருக்கு இந்தியா ரூபாய் 68ஆக இருந்தது. ஆனால் நிர்வாகத் திறன்மிக்க பா.ஜ.க. அரசில் அமெரிக்க டாலருக்கான இந்திய மதிப்பு 87 ரூபாய் வெகு விரைவில் 100 ரூபாய் வந்தாலும் ஆச்சரியமில்லை. இதுதான் பா.ஜ.க. ஒன்றிய அரசின் சாதனை.

இந்தியாவில் மெட்ரோ ரயில் பாதை போடப்பட்டது 1000 கி.மீ. இதில் தமிழ்நாட்டுக்குப் போடப்பட்ட பாதை வெறும் 54 கி.மீ. இது எந்த விதத்தில் நியாயம் ? உ.பி.யில் 5 மெட்ரோ ரயில், மகாராஷ்டிராவில் 4 மெட்ரோ, குஜராத்தில் 2 மெட்ரோ, ம.பி.யில் 2 மெட்ரோ தமிழ்நாட்டிற்கோ ஒன்றே ஒன்று! பிரதமர் மோடியே இது தமிழகத்தை வஞ்சிப்பதில்லையா?

அறிவியல் தொழில்நுட்பத் துறைக்கு சீனா ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு தெரியுமா? 43 லட்சம் கோடி. இந்தியா அந்தத் துறைக்கு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு தெரியுமா? 1.25 லட்சம் கோடி தான். இந்தப் பணம் இன்றைய அறிவியல் துறை முன்னேற்றத்திற்கு போதுமா? இஸ்ரோ நிலவின் தென்புறத்திற்கு ராக்கெட் வெற்றிகரமாக விட்டது. போட்டிபோட்டு விட்டது ரஷ்யா. ஆனால் வெற்றியடையவில்லை. சீனா அதற்கான முயற்சியில் முதல் நிலையில் தான் உள்ளது. இச் சூழலில் அண்டை நாடாக சீனாவை விட நாம் முன்னணியில் இருக்க வேண்டாமா? நிதி இல்லை என்பார்கள். அதானி, அம்பானி போன்ற பெரும் கார்ப்பரேட்டுகளுக்கு பா.ஜ.க. அரசு தள்ளுபடி செய்த தொகை எவ்வளவு தெரியுமா? ரூ.25 லட்சம் கோடி.

இது அவசியமா? இந்த தள்ளுபடி செய்யப்பட்ட நிதியை அறிவியல் துறைக்கு கொடுத்திருக்கலாமே பிரதமர் மோடி அவர்களே! நாட்டு நலனைவிட நண்பர்கள், பணக்காரர்கள் நலன் தான் உங்களுக்கு முக்கியமாக தெரிகிறதா?

கல்வியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. அதுமட்டுமல்ல 17 துறைகளில் முதலிடத்தில் உள்ளது என்று ஒன்றிய அரசின் பொருளாதார அறிக்கை கூறியுள்ளது.

பெட்ரோல் டீசல் விலை தற்போது பீப்பாய் 70 டாலர் தான் அதுவும் ரஷ்யாவிலிருந்து குறைந்த விலைக்கு வாங்குகிறோம். இந்த நிலையில் பெட்ரோல் விலை 56 ரூபாய்க்குள் தான் விற்கப்பட வேண்டும். மன்மோகன் சிங் ஆட்சியில் பீப்பாய் 100 டாலர் விற்றபோது அன்றைய பெட்ரோல் விலை 58 ரூபாய் தான். அதற்கான வரியை குறைத்து பெட்ரோல் - டீசல் விலையை ஏன் குறைக்கவில்லை ? இதில் அதானிக்கு கிடைத்த லாபம் எவ்வளவு தெரியுமா 38 லட்சம் கோடி. ஏழைகள் உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா? இது தானா பா.ஜ.க.வின் ஆளுமைத் திறன்?

நிர்வாகத்தில் சிறந்தவர்கள் என்று பீற்றிக் கொள்கிறீர்களே உங்கள் நிர்வாகத்தின் வெளிப்பாடே கும்பமேளா கொலைகள். இதை மரணம் என்று சொல்லாமல் கொலை என்கிறேனே என கோபம் வரத்தான் செய்யும். வி.ஐ.பி.களுக்கு வழங்கப்பட்ட சலுகை மற்றும் முக்கியத்துவம், பாதுகாப்பு மக்களுக்கு வழங்கவில்லையே. அதனால் தான் இத்தனைப் பேர் கொல்லப்பட்டனர். ஒரு வி.ஐ.பி.யாவது அதாவது பா.ஜ.க.வை சேர்ந்தவர் ஒருவராவது மரணித்தாரா? இது நம் விருப்பமில்லை. இருந்தாலும் அப்பாவி மக்கள் 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனரே அதற்காக கேட்கிறோம். உண்மையில் எத்தனை பேர் இறந்தார்கள் என கணக்குக் தெரியவில்லையா? இதுதான் உங்கள் நிர்வாக லட்சணமா?

குஜராத்தில் நடந்த வன்முறையில் இஸ்லாமிய சமுதாயத்தை சேர்ந்த எம்.பி. ஈசன் ஜாப்ரி கொல்லப்பட்டார். அவருடைய மனைவி ஜாகியா ஜாப்ரி 20 ஆண்டுகள் நீதி கேட்டு போராடினார். தற்போது அவரும் இறந்து விட்டார். அவருக்கு நீதி வழங்கப்பட்டதா? ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை?

2024 ஆம் ஆண்டு மட்டும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் 834 நடைபெற்றிருக்கிறதே! பலரை பல மாதங்களாக எதற்காக சிறையில் அடைத்து வைத்திருந்தீர்கள். அவர்கள் செய்த குற்றம் வீட்டில் புனித நூலான பைபிள் வைத்திருந்தது தான். இதை நாடாளுமன்றத்தில் கேரளாவை சேர்ந்த எம்.பி. ஜான் பிரிட்டாஸ் கேள்வியாக எழுப்பியிருந்தார். இதற்கு என்ன உங்களால் பதில் தரமுடிந்தது?

இந்தியா வந்து விட்டு சென்ற முன்னாள் அமெரிக்க அதிபர் பைடன் வியட்நாமில் செய்தியாளர்களிடம் “There is no religious freedom in India” என்றாரே! அதற்கு உங்களால் என்ன பதில் தர முடிந்தது.

தற்போது டிரம்ப் அதிபரானவுடன் இந்தியாவை சேர்த்த மக்கள் 104 பேரை இராணுவ விமானத்தில் கை கால் மற்றும் இடுப்பில் விலங்கிட்டு மனிதாபிமான முறையில் அனுப்பி வைத்தாரே குழந்தைகளுக்கும் விலங்கு போடப்பட்டிருந்ததே இதைக் கண்டித்தீர்களா? இதற்கு என்ன எதிர்வினை ஆற்றினீர்கள்? அமெரிக்க ட்ரம்புக்கு எதிராக முணுமுணுக்கக் கூட துணிச்சல் வரவில்லையே ஏன்? 140 கோடி இந்தியர்களும் தலைகவிழ்ந்து நிற்கின்றனர். இன்னும் சட்ட விரோத குடியேற்றமென்று 7 லட்சம் பேரை இந்தியாவிற்கு அனுப்ப உள்ளனராம். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறைந்தபட்சம் உங்கள் அமெரிக்கப் பயணத்தை ரத்து செய்கிறேன் என்றாவது கூறி இருக்கலாமே! இப்படி சீனர்களை டிரம்ப் அனுப்புவாரா? அவர்தான் இந்தியாவை வல்லரசு ஆக்கப் போகிறாராம்.

கொலம்பியா அதிபர் டிரம்பின் இச்செயலைக் கண்டித்துள்ளார். மெக்சிகோ நாட்டுப் பொருள்களுக்கு வரி கூடுதலாக டிரம்ப் விதித்ததை கண்டித்தார் அந்நாட்டு பிரதமர். உடனே டிரம்ப் வரியைக் குறைத்தார். அவர்களுக்கு உள்ள துணிச்சல் விரிந்த பெரும் மார்பு கொண்ட நம் பிரதமர் மோடிக்கு ஏன் வரவில்லை ? பயமா! பதட்டமா! பம்பலா! இல்லை பதுங்கலா! பதில் சொல்வீரா?

கடந்த ஆண்டு போராடிய விவசாயிகள் என்ன கேட்டார்கள். குறைந்தபட்ச ஆதார விலை? இதுவரை கொடுத்தீர்களா? அப்போராட்டத்தை ஆரம்பத்திலேயே பேசி நிறுத்தி இருந்தால் அப்பாவி விவசாயிகள் 726 பேர் உயிரிழந்திருக்க மாட்டார்களே ? இந்தியா விவசாய நாடு என்பதை மறந்து விட்டீர்களா? தமிழ்நாடு விவசாயிகள் டில்லியில் 100 நாட்கள் போராடினார்கள். ஒரு நாளாவது அவர்களை நீங்கள் பார்த்தீர்களா? விவசாயிகள் என்றால் அவ்வளவு அலட்சியமா? விவசாயி ஏரில் கைவைக்க வில்லையென்றால் நீங்கள் சோற்றிலும் சப்பாத்தியிலும் கை வைக்க முடியாது?

தமிழ்நாட்டிற்கு நிதி வழங்காவிட்டால் எப்படி திராவிட மாடல் அரசு நடக்கும் என்று நிதி தர மறுக்கிறீர்கள். அதற்காக உங்களிடம் மண்டியிட்டு மன்றாடி கெஞ்சப் போகிறவரல்ல எங்கள் முதல்வர் தளபதி. ஒருநாளும் அது நடக்காது. நிதியை தரவில்லையென்றாலும் நிலை குலைந்து போய் நிர்வாகம் செய்ய முடியாமல் எங்கள் முதல்வர் செயல்பாடு நிற்காது.

இப்படி எத்தனை எத்தனையோ கேள்விகள் உங்களுக்கு எதிராக தொடுக்கத் தயாராக இருக்கிறது. அதற்கு உங்களால் நிச்சயம் பதில் தர முடியாது.

இந்த லட்சணத்தில் நான் ஒரு கன்னடியன் என்று கூறிக் கொள்வதை பெருமையாக கருதுகிறேன் என்ற அண்ணாமலை மகா யோக்கியர் போல் வெள்ளை அறிக்கை கேட்டுள்ளார். மேலும் எங்கள் முதல்வர் அண்ணாமலையைக் கண்டால் பயப்படுகிறாராம் என்னே கற்பனை? பா.ஜ.க. தலைவர் ஆன பின்பு பல்லாயிரம் கோடி இவருக்கு எப்படி கிடைத்தது? சொல்வாரா?

வெள்ளை அறிக்கை அல்ல உங்களுக்கு தனியாக கருப்பு சிவப்பு வண்ண அறிக்கையே தருகிறோம். அதில் நாங்கள் கேட்கப் போகும் கேள்விகளுக்கு முடிந்தால் பதில் தரப்பாருங்கள். தேவையற்று எங்கள் கழகத் தலைவரை சீண்டாதீர்கள். ஐ.பி.எஸ். படித்துவிட்டால் அரசியலில் ஞானி என எண்ணாதீர்கள் ? அதுவேறு! இதுவேறு! கேட்கிறேன் கேள்விகள் அதுவரை பொறுத்து இருங்கள். கால் ஊன்ற இடமில்லை காட்டுக் கூச்சல் எதற்கப்பா?

ஈரடி நான்கடி கற்றவர்கள் நாங்கள். உங்கள் வாயடி கையடி எங்களிடம் எடுபடாது.